ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2095/46 - 2018 නොවැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2018.11.02

*2095/46 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், நகர அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் பண்டாரகம நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக உடனடியாக தேவைப்பட்டுள்ளதென்பது எனது அபிப்பிராயமானதால் சொல்லப்பட்ட காணித்துண்டுகள் குறித்த நோக்கத்திற்காகத் தேவைப்படுகின்றதென இக்கட்டளையின் மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
*2018, ஒற்றோபர் 28.*

1A – G 28844 – 10 (2018/11)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவின் பண்டாரகம என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், களுத்துறை மாவட்ட சிரேட்ட நில அளவையாளர் அத்தியட்சகரினால் காணிக்குரியதாகத் தயாரிக்கப்பட்டுள்ள இல. Ka/BND/17/350 மற்றும் 2017.09.21 ஆந் திகதிய பதிவெடுப்பில் ஏ, பி மற்றும் சீ இலக்கத் துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ளதுமான 4.2976 ஹெக்டயார் விஸ்தீரணமான பொக்குணகும்புர, சாயா கும்புர, வெவே கும்புர, நய்தெனிய கும்புர மற்றும் கொடுண்ணே கும்புர எனும் காணித்துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு :-

**துண்டு இலக்கம் ஏ - விஸ்தீரணம் : 3.1147 ஹெக்.**

வடக்கு : இரத்தினபுரி வீதி ;

கிழக்கு : எச். எம். பி. ஆர். பண்டார மற்றும் என். எம். ஜே. எஸ். பண்டார ஆகியோர் உரித்துக்கோரும் மல்ஹலனாவத்தை, வாய்க்கால், குமுதினி சந்திரிக்கா கொட்டிகல உரித்துக்கோரும் சோலை வரி இல. 47/7ஏ, சனாதிபதி மாவத்தை, பலிகேனகே ஜின்சன் ஜயதிலக்க உரித்துக்கோரும் இஹலவத்தை அதாவது, கித்துள் கஹவத்தை, கொளுவகேவத்தை அதாவது, கிரில்லவலவத்தை, கல்பொத்தேவத்தை அதாவது, பகலவத்தை மற்றும் உடுவகேவத்தை, சுனந்தா காந்தி விக்கிரம உரித்துக்கோரும் சோலை வரி இல. 47/23ஏ, சனாதிபதி மாவத்தை, எம். விஜேதிலக்க மற்றும் எம். எச். சி. குலசிங்க ஆகியோர் உரித்துக்கோரும் இகலவத்தை அதாவது, கித்துல்கஹவத்தை, கொலுவகேவத்தை அதாவது, கிறில்லவலவத்தை, கல்போத்தேவத்தை அதாவது, பகலவத்தை மற்றும் உடுவகெவத்தை மற்றும் சமந்தி ஹத்தகொட உரித்துக்கோரும் சோலை வரி இல. 43/2 மற்றும் 43/3, சனாதிபதி மாவத்தை ;

தெற்கு : சனாதிபதி மாவத்தை ;

மேற்கு : வாய்க்கால்.

**துண்டு இலக்கம் பி - விஸ்தீரணம் : 0.0195 ஹெக்.**

வடக்கு : வாய்க்கால் மற்றும் துண்டு இல. ஏ ;

கிழக்கு : வீதி மற்றும் துண்டு இல. ஏ ;

தெற்கு : சனாதிபதி மாவத்தை மற்றும் துண்டு இல. ஏ ;

மேற்கு : சனாதிபதி மாவத்தை, துண்டு இல. ஏ மற்றும் வாய்க்கால்.

**துண்டு இலக்கம் சீ - விஸ்தீரணம் : 1.1634 ஹெக்.**

வடக்கு : சனாதிபதி மாவத்தை ;

கிழக்கு : வீதி, அரசு உரித்துக்கோரும் பண்டாரகம வாரச் சந்தை, பத்மலதா பெரேரா உரித்துக்கோரும் ஆதர்ச வத்தை, வீதி மற்றும் திஸ்ச ஜயசிங்க உரித்துக்கோரும் கஜேருவத்தை ;

தெற்கு : திஸ்ச ஜயசிங்க உரித்துக்கோரும் கஜேருவத்தை ;

மேற்கு : திஸ்ச ஜயசிங்க, சீ. எல். சேனாநாயக்க, எம். டி. எஸ். கே. குரே ஆகியோர் உரித்துக்கோரும் கஜேருவத்தை, சீத்தா ரஞ்சனி களஞ்சூரிய உரித்துக்கோரும் நய்தெனிய ஓவிட்ட வாய்க்கால் மற்றும் வீதி.

*11-756*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.